உ



ஓம் குஹாய நம:

# திருப்புகழமிர்தம்

"குருப்புகழை மேவுகின்ற கொற்றவன் ருள்போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம்"


மலர் 15 | விக்ருதி ஆண்டு புரட்டாசித் திங்கள் செப்டம்பர்-1950 | இதழ் 6


## திருப்புகழ்

### பொது

வேடர்செழுந்தினை காத்திதண்மீதிலிருந்தபி ராட்டிவி
லோசன அம்புக ளாற்செயல் தடுமாறி-
மேனித ளர்ந்துரு கார்ப்பரி தாபமுடன்புன மேற்றிரு
வேளைபு குந்தப ரார்க்ரம மதுபாடி;

நாடறி யும்படி கூப்பிடு நாவலர் தங்களை யார்ப்பதி
னுலுல கங்களு மேத்திய இருதாளில்-
நாறுக டம்பணி யாப்பரி வோடுபு ரந்தப ராக்ரம
நாடஅ ருந்தவம் வாய்ப்பது மொருநாளே;

ஆடக மந்தர நீர்க்கசை யாமலு ரம்பெற நாட்டியொ
ராயிர வெம்பகு வாய்ப்பணி கயிருக-
ஆழிகடைந்தமு தாக்கிய நேகர்பெ ரும்பசி தீர்த்தரு
ளாயனு மன்றெயில் தீப்பட அதிபார;

வாடைநெ டுங்கிரி கோட்டிய வீரனுமெம்பரமாற்றிய
வாழ்வென வஞ்சக ராக்ஷதர் குலமாள-
வாசவன் வன்சிறை மீட்டவ னூரும டங்கலு
மீட்டவன்
வானுல குங்குடி யேற்றிய பெருமாளே.

## பதவுரை

ஆடக மந்தரம் – பொன்மயமான மந்தர மலையை, நீர்க்கு அசையாமல் – திருப்பாற்கடலில் அசையாதபடி, உரம்பெற நாட்டி – வலிமை பொருந்தும்படி நிறுவி, ஒரு ஆயிர வெம்பகுவாய் பணி கயிறு ஆக – ஓராயிரம் வெப்பமான வாய்களையுடைய வாசுகியை தாம்புக்கயிருகப் பிடித்து, ஆழிகடைந்து – பாற்கடலைக் கடைந்து, அமுது ஆக்கி – அமுதத்தை உண்டாக்கி, அநேகர் பெரும் பசி தீர்த்து அருள் – இந்திராதி இமையவர்களது மிகுந்தபசியை நீக்கி அருள்புரிந்த, ஆயனும் – ஆயர்குலத்தில் அவதரித்த திருமாலும், அன்று எயில் தீப்பட – அந்த நாளில் முப்புராதிகளின் மதில் எரிந்து அழியும்படி, அதிபார வாடை நெடுங்கிரி கோட்டிய – மிகுந்த கனமுள்ள நீண்ட வடமேருகிரியை வில்லாக வளைத்த, வீரனும் – உருத்திரமூர்த்தியும், எம்பரம் ஆற்றிய வாழ்வு என – "அமரரைக் காக்கும் எமது சுமையைத் தணித்த வாழ்வே" என்று துதிக்க, வஞ்சக ராக்ஷஸர் குலம் மாள – வஞ்சனையைச் செய்யும் அசுரர்களுடைய குலம் மாளச் செய்து, வாசவன் – தேவேந்திரனுடைய, வன் சிறை மீட்டு – வலிமையான சிறையை நீக்கி, அவன் ஊரும் அடங்கலும் மீட்டு – அவனுடைய அமராவதி நகரத்தையும் ஏனை எல்லாப் பொருள்களையும் மீட்டுத்தந்து, அவன் வான் உலகுங் குடி ஏற்றிய – அவனுடைய உலகமாகிய விண்ணுலகத்தில் என்றும் நின்று நிலவுமாறு குடியாகவைத்து அருள்புரிந்த, பெருமாளே – பெருமையின் மிக்கவரே! வேடர் செழுந்தினை காத்து – வேடர்களுடைய செழுமை வாய்ந்த தினைப்புனத்தைக் காவல் செய்து, இதண் மீதில் இருந்த பிராட்டி – பரண்மீதில் இருந்த வள்ளிபிராட்டியாருடைய, விலோசன அம்புகளால் செயல் தடுமாறி – கண்களாகிய கணைகளினால் செயல் தடுமாறியது போல் நடித்து, மேனி தளர்ந்து உருகா – உடல் தளர்ந்து உள்ளம் உருகி நின்று, பரிதாபமுடன் – இரக்கத்தோடு கிழவடிவு கொண்டு, புனமேல் – தினைப்புனத்திற்கு, திருவேளை புகுந்த பராக்ரமம் அதுபாடி – சிறந்த சமயத்திற் சென்ற வல்லபத்தை புகழ்ந்துபாடி, நாடு அறியும்படி கூப்பிடு நாவலர் தங்களை – உலகம் அறிய அழைக்கின்ற புலவர்களை, பதினலு உலகங்களும் ஏத்திய – பதினலு உலகங்களும் துதிக்கின்ற, நாறு கடம்பு அணியா – மணங்கமழ்கின்ற கடப்பமாலையைத் தரித்துக்கொண்டுள்ள, இருதாளில் – இரண்டு திருவடிகளில், பரிவோடு புரந்த பராக்ரமம் – அன்புடன் ஆட்கொண்ட திருவருளின் வலிமையை; நாட அருந்தவம் வாய்ப்பதும் – நாடி நிற்க அருமையான தவப்பயனல் அடியேனுக்கு அருள்கூடுவதும், ஒருநாளே – ஒருநாளும் உளதாகுமோ?

## பொழிப்புரை

பொன்னிறமுடைய மந்தரமலையை திருப்பாற்கடலில் அசையாமல் உறுதியாக நிற்கும்படி நிறுவி வெப்பமான ஆயிரம் வாய்களுடன் கூடிய வாசுகி என்ற நாகராஜனைத் தாம்புக் கயிருகப் பிணித்து, பாற்கடலைக் கடைந்து, அமுதத்தையெடுத்து, இந்திரனாதி இமையவர் பசியகல வழங்கியருளியவரும், ஆயர்குலத்தில் அவதரித்தவருமாகிய திருமாலும், முப்புர அரக்கர்களின் மதில்கள் எரியும்படி, மிகவும் கனமுள்ள வடமேருகிரியை வில்லாகப்பிடித்து வளைத்த உருத்திரமூர்த்தியும், "தேவர்களைக் காக்கும் எமது சுமையைத் தணித்த வாழ் முதலே" என்று துதிக்கவும், வஞ்சனையைச் செய்யும் அவுணர்களுடைய குலத்தை மாய்த்தும், இந்திரனுடைய சிறையை மீட்டு அவனுடைய அமராவதி நகரையும் காமதேனு, கற்பகமரம், சிந்தாமணி, அரம்பையர், முதலிய எல்லாவற்றையும் சிறை மீட்டுத் தந்து, அவனுடைய பொன்னுலகத்தில் குடிபுகச் செய்து அருள்புரிந்த பெருமிதம் உடையவரே! வேடர்களுடைய வளமையான தினைப்புனத்தைக் காவல் புரிந்து, பரண் மீது இருந்த வள்ளிநாயகியினது கண்களாகிய கணைகள் பட்டு மயங்கியவரைப் போல் நடித்து, தளர்ந்த உடம்புடன் சென்று உள்ளம் உருகி இரக்கமுடன் புனத்தின்கண் தக்க சமயம் பார்த்து அடைந்த கருணைத் திறத்தைப் புகழ்ந்து பாடி, உலகம் உணர அழைக்கின்ற புலவர்களை, அரிய பதினாலு உலகங்களும் போற்ற நறுமணங்கமழும் கடப்பமலர்மாலை புனைந்த திருவடிகளில் அன்புடன் ஆட்கொண்ட திருவருளை என்றும் அடியேன் நாடி நலம்பெற அருந்தவம் கிடைக்கும் நாள் ஒன்றும் உளதாகுமோ?

## விரிவுரை

### வேடர் செழுந்தினை காத்திதண் மீதிலிருந்த பிராட்டி:—

வள்ளி நாயகி தினைப்புனத்தில் பரண்மீது இருந்து தினைப் பயிரை இனிது காவல்புரிந்ததன் உட்பொருள் கீழ்வருமாறு.

நெஞ்சமாகிய வயலிலே, ஆணவமாகிய காட்டை வெட்டி, அகங்காரமாகிய கல்லைப் பிளந்து, கடினமாகிய மேட்டை எடுத்து, உண்மையாகிய உழவைச் செய்து, மௌனம் என்ற

வித்தை விதைத்து, அன்பு என்ற தண்ணீரைப் பாய்ச்சி, சாந்தமாகிய வேலியிட்டு, ஞானமாகிய பயிரை வளர்த்து, அதில் தோன்றிய முத்தி என்ற கதிரைக் கொய்யவந்த, காமக் ரோதமாதி பறவைகளை, வைராக்கியமாகிய பரண்மீது இருந்து, ஆன்மாவாகிய வள்ளி, பக்தியென்ற கவணிலே, இறைவனது திருநாமங்களாகிய கற்களை வைத்து எறிந்து, இனிது காவல் புரிந்தனள் என்று உணர்க.

"காராரும் ஆணவக் காட்டைக் களைந்தறக்
கண்டகங் காரமென்னும்
கல்லைப்பிளந்து நெஞ் சகமான பூமிவெளி
காணத் திருத்திமேன்மேல்
பாராதி யறியாத மோனமாம் வித்தைப்
பதித்தன்பு நீராகவே
பாய்ச்சி யதுபயிராகு மட்டுமாமாயைவன்
பறவையணு காதவண்ணம்
நேராக நின்று விளைபோகம் புசித்துய்ந்த
நின்னன்பர் கூட்டம்" —தாயுமானர்.

## திருவேளை புகுந்த பராக்ரமம் அதுபாடி:—

பலகாலும் மாதவஞ் செய்த சுந்தரவல்லியை மான் வயிற்றில் பிறந்து குறவர் குடியில் வளருமாறு கந்தவேள் கட்டளையிட்டருளினர். அந்த அன்னை அவ்வண்ணம் பிறந்து, வளர்ந்து தினைகாவல் புரிந்திருந்தனர். காமனை யெரித்த கனற்கண்ணிலே யிருந்து வெளிப்பட்ட ஞானபண்டிதனர் வள்ளியம்மையின் தவப்பண்புக்கு உள்ளம் உவந்து, மனம் உருகி, பக்குவத்தை யறிந்து சென்று அருள்புரிந்தனர்.

இருவினை யொப்பு, மலபரிபாகம் எய்தி சத்திநிபாதம் அடைந்த வேளையில் இறைவன் வெளிப்படுவான்.

"உணக்கிலாததோர் வித்துமேல் விளையாமல் என் வினை
யொத்தபின்
கணக்கிலாத் திருக் கோலம் நீவந்து காட்டினய் கழுக்குன்றிலே"

என்பார் மாணிக்கவாசகர்.

வடிவேற் பெருமான் வள்ளி நாயகிக்கு அருள்புரிந்தது அவருடைய பரமகருணையின் முதிர்ச்சி யென்க. அதனல் அக்

கருணையையும், வள்ளியம்மைக்கு அருள்புரியச் சென்ற அடி மலரையும் மிகவும் பாராட்டி மெய்ஞ்ஞானிகள் புகழ்ந்து பாடுகின்றனர்.

"மஞ்சு தவழ் சார லஞ்சயிலவேடர்
மங்கைதனை நாடி வனமீது
வந்த சரணார விந்தமதுபாட
வண்டமிழ் விநோத மருள்வாயே" —திருப்புகழ்.

"மேவிய புனத்திதணி லோவிய மெனத்திகழு
மேதகு குறத்திதிரு வேளைக்காரனே" —வகுப்பு.

## நாடறியும்படி கூப்பிடு நாவலர்:—

மறைகளின் முடிவால் வாக்கால் மனத்தினால் அளக்கமுடியாத முருகனுடைய பெருமையையும், கருணையின் எளிமையையும் உலகம் அறிந்து உய்யும்படி முழக்கமாக மொழிந்து, உலக மாந்தரைக் கந்தவேள் கருணையைப் பெறுமாறு அறைகூவி அருட்புலவர்கள் அழைப்பார்கள். தாம் பெற்ற இன்பம் தரணிபெறவேண்டும் என்ற கருணையால் என்று அறிக.

"இவையொழியவும் பலிப்ப தகலவிடு முங்கள் வித்தை
யினையினி விடும்பெருத்த பாருளீர்
மயிலையு மவன் றிருக்கை அயிலையு மவன் கடைக்க
ணியலையு நினைந்திருக்க வாருமே" —வகுப்பு.

நாவிலே வன்மையுடையவர் நாவலர். நறுந்தமிழை யோதி உணரும் நாவலருடைய நாவில் முருகவேளின் திருவடி உறையும்,

"பலகலை படித்தோது பாவாணர் நாவிலுறை
இரு சரண வித்தார வேலாயுதா" — திருப்புகழ்.

## பதினாலுலகங்களுமேத்திய இருதாள்:—

திருவேலிறைவன் திருவடிப் பெருமை அளவிடற் கரியது. தேவரும் மூவரும் அறிகிலர்.

"சுருதி மறைக ளிருநாலு திசையிலதிபர் முனிவோர்கள்
துகளிலிருடி எழுபேர்கள் சுடர்மூவர்

சொலவின் முடிவின் முகியாத பகுதி புருடர் நவநாதர்
தொலைவி னுடுவி னுலகோர்கள் மறையோர்கள்
அரிய சமய மொருகோடி அமரர் சரணர் சதகோடி
அரியு மயனு மொருகோடி யிவர்கூடி
அறிய அறிய அறியாத அடிகள்''

''ஆலமுண்ட கோனகண்ட
லோகமுண்ட மால் விரிஞ்சன்
ஆரணங்க ளாகமங்கள் புகழ்தாளும்'' —திருப்புகழ்.

## பரிவோடு புரந்தபராக்ரமம்:—

பலகலைபடித்து ஓதும் சீலமுள்ள செந்தழ்ப் புலவர்களை செவ்வேட் பரமன் தனது செந்தாமரைத் தாளில் வைத்துக் காத்தருளுகின்றான். நக்கீரர், சிகண்டி முனிவர், சிதம்பர சுவாமிகள், குமரகுருபரர், பொய்யாமொழிப்புலவர், பாம்ப னடிகள் முதலிய அருட்புலவர்களை ஆண்டருளிய கருணையை அகில லோகங்களும் அறியும்.

## நாட அருந்தவம் வாய்ப்பது மொருநாளே:—

பாவலரைப்புரந்த பரங்கருணைத் தடங்கடலாகிய பன்னிருகைப் பரமனது பாததாமரையை நாடுவதற்குப் பல பிறவிகளில் செய்த நிஷ்காம்மிய தவம் வேண்டும். ''தவமும் தவமுடையார்க்காகும்'' என்பார் பொதுமறை யாசிரியர்.

''முருகவேளின் திருவடியைப் பணிவதற்கு நான் என்ன தவஞ்செய்தேனோ?'' என்று அடிகள் அநுபூதியில் கூறுமாறுங் காண்க.

''காளைக் குமரேச னெனக் கருதி
தாளைப் பணியத் தவ மெய்தியவா?''

ஒருநாளே—ஒருநாளும் உண்டாகுமோ? என்று வினவுகின்றார். ஏகாரம் வினாப் பொருளில் வந்தது.

சிவமே பரம்பொருள் என்று பணியும் பேறு பெற்றதனால் அப் பெறலரும் பேற்றைக் குறித்து மாதவச் சிவஞான சுவாமிகள் வியந்து கூறும் தேனினும் இனிய செழும்பாடலைக் காண்க.

ஆனே றுயர்த்தருளி அன்றிஞர் ஊரெரித்த
கோனே எனக்குக் குலதெய்வமாம் பேற்ருல்
யானே தவமுடையேன், யானே தவமுடையேன்
யானே தவமுடையேன் எல்லா வுலகினுமே.

ஆடகமந்தர........ஆயனும்:—

இந்த இரண்டு அடிகளில் திருமால் திருப்பாற்கடலைக் கடைந்து பண்ணவர் பசியகற்றிய பராக்கிரமத்தை உரைக்கின்றனர்.

பொன்மேருமலை மத்தாக, வாசுகி தாம்பாக, சந்திரன் தறியாக, திருமால் கூர்மமாகித் தாங்க அமரர் ஆழி கடைந்தனர்.

திருமால் தேவர்களுக்கு நரை, திரை, மூப்பு, மரணம், பசி முதலிய இடர்கள் எய்தா வண்ணம் அமுதத்தை வழங்கியருளினர்.

"மாதிரமு மந்தரமு நீருமிலனுங் கனக
மால்வரையுடன் சுழல வாசுகிவிடம் பொழிய
மகர சலிலங் கடைந் திந்த்ராதியர்க் கமுது
பகிர்தரு முகுந்தன்மன் பஞ்சாயுதக் கடவுள்" - திருவகுப்பு

சிவார்ச்சனை செய்பவர்களில் முதன்மை பெற்ற திருமால் அந்த அமுதத்தை சிவபக்தர்களுக்கே அளித்தனர் என்று அறிக.

"திசையிற் பொற்கிரி யாடவும் வாசுகி
புனைவித்துத் தலை நாளமு தார்சுவை
சிவபத்தர்க்கிது வாமெனபகிர் அரிராமர்" —திருப்புகழ்

அன்றெயில் தீப்பட...கிரிகோட்டிய வீரனும்:—

முப்புராதியர் கொடுமைக்கு ஆற்ருது அமரர் அரனுரிடம் முறையிட்டனர். திரிபுர சம்மாரத்தின்பொருட்டு தேவர் ஒரு தேரையும் அமைத்துத் தந்தனர்.

பூமி தேர்த் தட்டாக, கீழேயுள்ள ஏழு தலங்களும் மேலேயுள்ள ஏழு உலகங்களும் தேரின் கீழுமேலுமுள்ள பகுதிகளாக வாளகிரி அச்சாக, சந்திர சூரியர் சக்கரங்களாக, முப்பத்து முக்கோடி தேவர்களும் தேர்ப் பதுமைகளாக, ஏழு மேகங்களும் தேர்ச் சீலைகளாக, எண் திசைக் காவலர்கள் எட்டு

குத்துக்கால்களாக, மேருமலை வில்லாக, சேடன் நாணாக, திருமால் கணையாக, அக்கணைக்கு அழற் கடவுள் வாயாக, வாயு குதையாக, சாரதிகேள்வன் சாரதியாக, நான்மறைகள் புரவிக ளாக, இவ்வாறு எல்லாம் அத்தேரின் ஒவ்வொரு உறுப்புக் களாக அமைந்தன. "நம்முடைய துணையினாலேதான் சிவ பிரான் திரிபுரசம்மாரஞ் செய்கின்றனர்" என்று இமையவர் கள் எண்ணினார்கள். அந்த எண்ணத்தை அறிந்த இறைவர் "நமக்கு ஒரு துணையும் வேண்டுமோ" என்று திருவுளத்தில் சிந்தித்து சிறிது சிரித்தருளினார். அதில் தோன்றிய ஒரு சிறிய தீப்பொறியால் திரிபுரம் சாம்பராகியது,

"மாநாக நாண் வலுப்புறத் துவக்கியொர்
மாமேரு பூதரத் தநுப்பிடித்தொரு
மாலாய வாளியைத் தொடுத்தரக்கரில் ஒருமூவர்
மாளாது பாதகப்புரத்ரயத்தவர்
தூளாக வேமுதல் சிரித்த வித்தகர்" —திருப்புகழ்.

## எம்பரமாற்றிய வாழ்வென:—

காத்தற் றொழிலையுடைய திருமாலும், சங்காரத் தொழி லுடைய சிவமூர்த்தியும், தேவர்களைக் காத்தலையும், அசுரசங் காரமும் முருகவேள் புரிந்ததனால், அவர்களுக்குப் பாரங் குறைந்தது. அதனால் "எமது சுமையைக் குறைத்த குமர வேளே" என்று துதித்தனர்.

ஆற்றுதல்—குறைத்தல். மாற்றிய எனினும் அமையும். பரம்-பாரம். குறுகல் விகாரம் பெற்றது.

"காக்கக் கடவியநீ காவா திருந்தக்கால்
ஆர்க்குப் பரமாம் அறுமுகவா"

என்ற இடத்திலும் இவ்வாறு வருவதை யறிக.

அரிக்கும் அரனுக்கும் உள்ள சுமையைக் குறைத்த குமர வேள் நமது வினைப் பாரத்தையுங் குறைத்தருளுவார்.

### கருத்துரை

திருமாலும் சிவனும் புகழ தேவர் சிறை மீட்ட திருவேலிறையே! பாவலரையாட்கொண்ட உமது பாதத்தைப் போற்ற அருள்புரிவீர்.

# பெரிய புராணம்

## பெருமிழலைக் குறும்பநாயனார் புராணம்

"பெருமிழலைக் குறும்பர்க்கும் பேயார்க்கும் அடியேன்"

தொன்மையான புகழ் படைத்த நாடு மிழலைநாடு. அந் நாட்டின் தலைநகரமாக விளங்குவது பெருமிழலை என்ற நகரம். மாந்தோப்பும், தென்னை, பலா, பாக்கு முதலியவைகளின் சோலைகளும் அந்நகரைச் சூழ்ந்திருக்கும். திருவீதிகளில் திருத்தொண்டர்கள் தரித்துள்ள திருவெண்ணீற்றின் ஒளி திகழும். நீதிநெறியினின்றும் வழுவாதவர்கள் வாழ்ந்தார்கள். இத்தகைய சிறப்பு மிக்க பெருமிழலையில் மிழலைக் குறும்பனார் வாழ்ந்தனர். குறும்பர் என்ற குறுநிலமன்னர் குடியில் அவதரித்தவர். திங்களை முடித்த சிவபெருமானுடைய அடியார்கட்கு உவந்த தொண்டுகளை அவர்கள் கூறுமுன் குறிப்பறிந்து தாமே எதிர்கொண்டு இனிது புரிந்து, உணர்வின் பயனைப் பெறுவாராயினார்.

சிவனடியார்கள் எண்ணில்லாதவர்கள் வந்தாலும் உண்ணவுண்ணத் தொலையாத திருவமுது ஊட்டுவார். அவர்கட்குக் காணிக்கையாகச் செம்பொன்னை அள்ளி வழங்குவார். அடியவர் முன் மிகவும் அடக்கமாகச் சென்று வழிபடுவார். இமயவல்லி பங்கராம் இமையா முக்கட்பரமனது திருவடித்தாமரைகளை இதய தாமரையில் வைத்துத் தியானிப்பார்.

இவ்வாறு சிவநெறியில் ஒழுகும் பெறுமிழலைக்குறும்பநாயனார், எல்லையில்லாத திருத்தொண்டின் உண்மையை உலகறிய, திருத்தொண்டரை முறையுடன் வணங்கி, திருத்தொண்டத்தொகையைப் பாடியருளிய நம்பியாரூரரைப் பணிவதையும், அடியார்களது திருவடிகளை நினைவதையும் நியமமாகக் கொண்டனர்.

மையார் தடங்கண் பரவையார் மணவாளன்றன் மலர்க்கழல்கள்
கையால் தொழுது வாய்வாழ்த்தி மனத்தால் நினைக்குங் கடப்பாட்டில்
செய்யான் கோனும் நான்முகனும் அறியாச்செம்பொற்றாளிணைக்கீழ்
உய்வான் சேர வுற்றநெறி இதுவே என்றன் பினிலுற்றார்.

மையெழுதிய நீண்ட கண்களையுடைய பரவையாருடைய கணவனாராகிய சுந்தரமூர்த்தி நாயனாருடைய திருவடிகளைக் கையினால் தொழுதும், வாக்கினால் வாழ்த்தியும், கருத்தினால் கருதியும் வழிபடும் கடமையில் உறுதியுடன் நின்று, மாலும் அயனும் அறியாத மணிகண்டர் மலரடிக் கீழ் சேர்ந்து உய்வதற்கு உரிய நெறி இதுவேயென்று அன்புடன் நிலைத்து நின்றனர். நாள்தோறும் நம்பியாரூராருடைய திருநாமத்தை உச்சரிக்கின்ற நலத்தினால் அணிமாதி அஷ்ட சித்திகளையும் பெற்றார். அன்பு மென்மேலும் பெருக பஞ்சாக்கரமே உறவும் செல்வமும் உணர்வும் என்று தேறி தியானஞ் செய்தவண்ணமாக இருந்தார்.

நாளு நம்பியாரூரர் நாமநவின்ற நலத்தாலே
ஆளும்படியாய் அணிமாதி சித்தியான அணைந்ததற்பின்
மூளுங்காதலுடன்பெருக முதல்வர் நாமத் தஞ்செழுத்தும்
கேளும் பொருளும் உணர்வுமாம் பரிசுவாய்ப்பக் கெழுமினார்.

இவ்வாறு இவர் சுந்தரருடைய செந்தாமரைத் திருவடியை இடையறாது சிந்தித்துக்கொண்டிருக்கும்போது, இடபக் கொடியுயர்த்த இறைவர் மறையவராக மண்மேல் வந்து வழக்குசெய்து ஓலைகாட்டி தடுத்து ஆட்கொண்ட வன்றொண்டர், சந்திரன் தவழும் உயர்ந்த மாடங்களுடன் கூடிய கொடுங்கோளூரையடைந்தனர். திருவஞ்சைக்களத்தில் எழுந்தருளிய நஞ்சுண்ட அமுதாகிய இறைவரைத் தொழுது திருப்பதிகம் பாடி, சேரமான் பெருமாள் நாயனாரது அரண்மனையில் தங்கியிருந்தபோது, திருக்கயிலை மலையை யடையும் பெருவாழ்வு நாளை எய்துகின்றது என்பதை திருவுள்ளத்தில் உணர்ந்தனர். அப்படி அவர் கொடுங்கோளூரில் நினைந்ததை பெருமிழலையில் இருந்த இவர் யோகக் காட்சியில் அறிந்தனர். "வன்றொண்டர் திருக்கயிலைமலையை நாளை செல்ல, கண்மணியைப் பிரிந்து வாழ்வாரைப்போல் நான் வாழமாட்டேன். இன்றே சிவபெருமான் திருவடியை யோகநெறியால் சார்வேன்" என்றனர். கருவிகரணங்களை ஒருமுகப்படுத்தி, சுழுமுனை நாடி வழியே பிராணவாயுவைச் செலுத்தி, பலகாலும் பயின்ற சாதனத்தின் முதிர்ச்சியினால் பிரமரந்திரவழியே சென்று பிரணவ நாதத்துடன் பிரமகபாலத்தைத் திறந்துகொண்டு திருக்கைலாயமலையைச் சார்ந்தனர்.

## விளக்கம்

### பெருமிழலை

சோழநாட்டில் உள்ள திருவீழிமிழலை என்ற தலம் வேறு. புதுக்கோட்டைக்கு அணித்தாகவுள்ளது மிழலைநாடு என்பர். வெள்ளாற்றின் தென்கரையில் மிழலைநாட்டுக்குத் தலைநகராக அக்காலத்தில் மிகவும் சிறப்புடையதாக விளங்கியது பெருமிழலை என்ற இந்நகரம். புதுக்கோட்டைக்கு அப்பால் உள்ள திருமயத்திற்கு அருகில் பேரையூரினின்றும் மேற்கே $\frac{1}{2}$ கல்லில் தேவமலையில் உள்ள குடவறையில் சிவலிங்கத்தின் திருமுன் சடைமுடியுடன் யோகநிலையில் அமர்ந்துள்ள முனிவர் திருவுருவம் பெருமிழலையார் எனக் கருதுகின்றனர்.

### குறும்பனார்

குறுநில மன்னர்களில் சிலர் குறும்பர் என்ற பேருடையவராய் முற்காலத்தில் இருந்தனர். அம் மரபில் வந்தவர் இவர். பெருமிழலை என்பது ஊரின் பெயர்; குறும்பர் என்பது மரபின் பெயர். இரண்டுஞ் சேர்ந்து பெருமிழலைக் குறும்பனார் எனப் பட்டனர். எனவே இவருடைய இயற்பெயர் விளங்கவில்லை.

### இதய பூசை

இறைவனை உள்முகமாகவைத்து வழிபடுவதற்கு அந்தர்யாகம் என்று பேர். அந்தர்யாகம் புரியாது வெளிமுகப்பூசை புரிவது சிறப்படையாது.

அர்ச்சித்தான் அந்தரியாகம் புரியாதே பலத்தை
வர்ச்சித்தா னென்றே மதி. —சைவசமயநெறி.

யாகம் நாபியிலும், சமாதி புருவநடுவிலும், பூசை இதயத்திலும் புரிதல் வேண்டும் என்று சிவாகமங்கள் கூறுகின்றன.

"ஹ்ருத்பத்மே பூஜயேத்வித்வான்" —சுப்ரபேதம்.

"துரியநிலையே கண்ட முத்தரிதயா கமல
மதனில் விளையா நின்ற அற்புதசுபோத சுக
சுயபடிக மாவின்ப பத்மபதம்" —திருப்புகழ்

## குருபக்தி

இறைவனுடைய திருவருளைப் பெறுவதற்குக் குருவருளே சிறந்த சாதனமாம். பிறவியாகிய பெருங்கடலைக் கடப்பதற்கு இறைவன் திருவடி மரக்கலமாகும். குருநாதன் மாலுமியாகும். மரக்கலத்திற்கு மாலுமி எத்துணை அவசியம் என்பதனை யுணர்க.

கருடன் உருவத்தைக் கருதுவோர் விடபயம் நீங்குவர். அதுபோல் குருவின் திருவுருவத்தைக் கருதுவோர் மும்மலங் களும் நீங்கி முத்திநலம் பெறுவர்.

கருட னுருவங் கருது மளவில்
பருவிடந் தீர்ந்து பயங்கெடு மாபோல்
குருவி னுருவங் குறித்தவப் போதே
திரிமலந் தீர்ந்து சிவனவ னாமே. —திருமந்திரம்.

குருநாதர் கண்மணிக்கு நிகராவார் என்க. கண்மணி வழியையும் குழியையும் உணர்த்தும். குருநாதர் நன்மை தீமையை உணர்த்துவார். குருவில்லாதவர், கண்ணில்லாத குருடனுக்கு நிகராவர். நாளை நம்பியாரூரர் கயிலைமலை செல் லுங் குறிப்பினை யுணர்ந்த பெருமிழலையார் "குருநாதனை யிழந்து நான் இங்கு வாழேன்; இன்றே இறைவனடி சார் வேன்" என்று சிவயோக நெறியில் கபாலமூலம் திறந்து கொண்டு கண்ணுதல் கழலிணையைச் சார்ந்தனர்.

மண்ணில் திகழுந் திருநாவ லூரில் வந்த வன்றொண்டர்
நண்ணற் கரிய திருக்கயிலை நாளை யெய்த நான்பிரிந்து
கண்ணிற் கரிய மணிகழிய வாழ்வார் போல வாழேன்என்
றெண்ணிச் சிவன்றாள் இன்றே சென்றடைவன்
யோகத் தாலென்பார்.

குரு பக்தியால் திருவருள்பெற்றது மட்டுமின்றி அட்டமா சித்திகளையும் இவர் பெற்றனர்.

குருநமசிவாயர் குருபக்தியால் திருவருட்பேறு பெற்றதும், உபமன்யு முனிவர் முக்காலமுணரும் அருட்கண் பெற்றதும் ஈண்டு நினைவு கூர்க. குருபக்தியில் மிக்க அப்பூதியடிகளையும் உன்னுக.

மனம், மொழி, மெய் என்ற மூன்று கரணங்களாலும், தனது குருமூர்த்தியாகிய சுந்தரரை இவர் வழிபட்டனர். அதன் பயனால் சிவயோக நெறியைப் பெற்றனர்.

### சிவயோகம்

பிராண வாயுவைப் பிடித்து வெளியே விடாமல் அடக்கிச் செய்யும் யோகம் ஹடயோகம் எனப்படும். அது ஞான நெறியன்று. சிவயோகம் என்பது, பிராணவாயு தொடர்ந்து சஞ்சரிக்கச் செய்து இடை பிங்கலை நாடிகளிற் செல்லாவண்ணந் தடுத்து, சுழுமுனை நாடியிற் செலுத்தி உடல் வேறு தான் வேருகப் பிரிந்து நிற்கும் வகையைக் கைவரப்பெறுவது ஆகும்.

பால்—சரியை; பாலினின்றுந் தோன்றிய வெண்ணெய்—கிரியை; வெண்ணெய் உருக்கத் தோன்றிய நெய்-யோகம்; நெய்யின் சுவை—ஞானம் என்க.

சிவயோகத்தின் மர்மத்தை நன்கு அறிந்த அருணகிரிநாத அடிகள் அதனைப் பல இடங்களில் நுட்பமாகவும், திட்பமாக வும் அருளிச் செய்தனர். அவற்றுள் சில வருமாறு.

"ஐந்து பூதமு மாறு சமயமும்
மந்த்ர வேத புராண கலைகளும்
ஐம்ப தோர்வித மான லிபிகளும் வெகுரூப
அண்ட ராதிசரா சரமுமுயர்
புண்டரீகனும் மேக நிறவனும்
அந்தி போலுரு வானு நிலவொடு வெயில்காலும்
சந்த்ர சூரியர் தாமு மசபையும்
விந்து நாதமு மேக வடிவம
தன்சொ ரூபம தாக வுறைவது சிவயோகம்"
—திருப்புகழ்.

"உடலுமுட லுயிருநிலை பெறுதல்பொரு ளெனவுலக
மொருவிவரு மநுபவன சிவயோக சாதனையில்
ஒழுகுமவர் பிறிதுபர வசமழிய விழிசெருகி
உணர்வு விழி கொடுநியதி தமதூடு நாடுவதும்"
—சீர்பாதவகுப்பு.

துருத்தியெனும்படி கும்பித்து வாயுவைச் சுற்றிமுறித்
தருத்தி யுடம்பை யொறுக்கி லென்னும் சிவயோக மென்னுங்
குருத்தை யறிந்து முகமாறுடைக் குருநாதன் சொன்ன
கருத்தை மனத்தில் இருத்துங் கண்டீர் முத்தி கைகண்டதே.

நீலச் சிகண்டியில் ஏறும்பிரான் எந்தநேரத்திலும்
கோலக்குறத்தி யுடன் வருவான் குருநாதன் சொன்ன
சீலத்தை மெள்ளத் தெளிந்தறிவார் சிவயோகிகளே
காலத்தை வென்றிருப்பார் மரிப்பார் வெறுங் கர்மிகளே.

—கந்தரலங்காரம்.

பெருமிழலைக்குறும்ப நாயனர் இந்த சிவயோகநெறியில் நின்று நம்பியாரூரருடைய திருவடியை நம்பி நாளும் தியானித்துக் கொண்டிருந்தனர்.

உயிர் இந்த உடம்பைவிட்டுப் பிரியும் வாயில் பதினொன்று என அறிக. (1) மிகுந்த பாவஞ் செய்தவனுக்கு மலவாயில் வழி மலத்துடன் உயிர் பிரியும். அவ்வாறு பிரிந்த உயிர் நரகங்களிற் சென்று வேதனையுற்று குறுக்கேயுள்ள பிறவிகளிற் பிறந்துழலும்.

(2) பாவஞ் செய்தவனுக்கு நீர்வாயில் வழி உயிர் பிரியும். அவ்வாறு பிரிந்தவுயிர் மறுபிறப்பில் காமியாய்த் திரியும்.

(3) பாவம் பெரிதும் சிறிது புண்ணியமுஞ் செய்தவுயிர் நாபிவழியே பிரியும்; அவ்வாறு பிரிந்த வுயிர், வறியவனாகவும், நோயாளனாகவும், அங்கவீனனாகவும் பிறந்து உழலும்.

(4) பாவமும் புண்ணியமும் சமனாகச் செய்தவனுக்கு வாய்வழியே உயிர் பிரியும்; அவ்வாறு பிரிந்தது மறுபிறப்பில் மிகுந்த உணவை யருந்துவதாகவும், உணவு நசையுள்ளதாகவும் பிறக்கும்.

(5 & 6) இடநாசி வலநாசி வழியே தனித்தனியே பிரிந்த உயிர் அதிகபாவமில்லாதது என அறிக. அவ்வுயிர் மறு பிறப்பில் நறுமணத்தை மிகவும் விரும்பும்.

(7 & 8) இடச்செவி-வலச் செவி வழியே பிரிந்த உயிர் புண்ணியஞ் செய்த உயிர் என அறிக. அவ்வுயிர் மறுபிறப்பில் கேள்விச் செல்வம் உடையதாக வாழும். இயல் இசையைக் கேட்பதிலேயே காலங் கழிக்கும்.

(9 & 10) மிகுந்த புண்ணியஞ்செய்தவுயிர் இடக்கண்-வலக்கண் வழியே பிரியும்; மறுபிறப்பில் கல்வி-செல்வம் முதலியன பெற்று உயர்வுடன் வாழும்.

# கற்பு

## கனகாங்கி

### "கண்ணால் கண்டதும் பொய்"

கமலசேனனும் கனகாங்கியும் மிகுந்த ஒற்றுமையாக இல்லறத்தை நடாத்தினார்கள். அவர்களுக்குள் ஒரு நாளும் சிறு விஷயத்திலேயுங்கூட மனவேற்றுமை யுண்டாகவில்லை. தேனும் பாலும் போலே இன்ப வாழ்க்கையில் மகிழ்ந்தார்கள். வளர்பிறை மதிபோல் நாடோறும் அவர்களுக்குள் அன்பு வளர்ந்துகொண்டே யிருந்தது. கனகாங்கி கருப்பு நிறமாக இருந்தும் அவள் மனம் பால் போன்று வெண்மையாகவும்

---

(11) சிவயோக நெறியில் நின்ற ஆன்மா, உடம்பு முகந்து கொண்ட பிராரப்தங்களைத் தனக்குத் தொடர்பு இன்றி உடலூழாய் கழியுமாறு செய்து, கழிந்தபின், பலகாலும் செய்த சாதனத்தினால், சுழுமுனைநாடி வழியே பிராணனைச் செலுத்தி, பிரமரந்திர வழியைத் திறப்பித்து, மேலைப் பெரு வெளியில் நிறுத்தி, கபால வெளியைத் திறப்பித்துக் கொண்டு ஒளிமயமாகச் செல்லும். அவ்வாறு சென்ற ஆன்மா மீண்டும் ஈண்டுவந்து பிறவாது.

பெருமிழலையார் சிவயோகச் செந்நெறி நின்றவர் ஆதலின், கொடுங்கோளூரில் இருந்த நம்பியாரூரர் "நாளை கயிலை செல்ல வேண்டும்" என்று எண்ணியதை, இங்கே பெருமிழலையில் இருந்தே யோகக்காட்சியால் அறிந்து "அவர் நாளை செல்ல இங்கு நான்அவரையின்றி யிருந்து வாழேன்; இன்றே சிவனடி சார்வேன்" என்று எண்ணித் துணிந்து, சுழுமுனைநாடி வழியே பிராணனைச் செலுத்தி, பிரமரந்திரவழியே மேலைப் பெரு வெளி சார்ந்து, கபாலத்தினைத் திறப்பித்து ஒளிவடிவாக பர வெளியைச் சேர்ந்தனர் என்று உணர்க.

நாலு கரணங் களுமொன்ற நல்ல அறிவுமேற் கொண்டு
காலும் பிரம நாடிவழிக் கருத்துச்செலுத்தக் கபாலநடு
ஏல வேமுன் பயின்றநெறி யெடுத்த மறைமூ லந்திறப்ப
மூல முதல்வர் திருப்பாதம் அடைவார் கயிலை முன்னடைந்தார்.

உண்மையாகவும் இருந்தது. எப்போதும் மலர்ந்த முகமாகவும் புன்னகையோடும் இருப்பாள். தயாள சிந்தையுடைய அவள் வீட்டிற்கு முன் வந்த ஒரு பிச்சைக்காரனுவது காலியாகத் திரும்பியதில்லை.

கமலசேனன் பெரிய உத்தியோகத்திலிருந்தான். போதுமான வருவாயுமிருந்தது. "செல்வம் என்பது சிந்தையின் நிறைவு" என்றபடி வந்த வருவாயைக்கொண்டு திருப்தியாக வாழ்ந்துகொண்டிருந்தார்கள். எவ்வளவு குறைந்த வருவாயுள்ளோர்களும் மகிழ்ச்சியாக வாழ்வதற்கு ஒரு வழியுண்டு. செலவின் விரிவைக் குறைத்துக்கொள்ளவேண்டும். நம்மைவிடக் குறைந்த வருவாயுள்ளவர்களைக் கண்டு நாம் மகிழவேண்டும். நம்மைவிட மேலான வாழ்வில் இருப்பவர்களைக் கண்டு நாம் ஏங்கக்கூடாது. ஓட்டுவில்லை வீட்டில் வாழ்பவன் கூரை வீட்டிலே வாழ்பவனைக் கண்டு தனக்குக் கடவுள் தந்த நலனை நினைத்து திருப்தியடையவேண்டும். இந்த மனப்பான்மையுடன் கனகாங்கி இனிது வாழ்ந்தனள். அவள் முகத்தில் எப்போதும் அமைதியும் ஆனந்தமும் நிலவிக்கொண்டிருந்தன.

சென்னையிலே வாழ்ந்த அவர்கட்கு எல்லா வசதிகளும் நிரம்பியிருந்தன. அன்னையைத் தவிர மற்றவையெல்லாம் சென்னையிலே கிடைக்குமல்லவா? கமலசேனனும் தாராளமானவன். வேண்டியவற்றை வேண்டியவாறு வேண்டிய போதே வாங்கி மனைவிக்குத் தருவான். நாளைக்கு வேண்டுமே என்ற எண்ணமே அவனுக்குக் கிடையாது. அவர்கள் வாழ்விலே மகப்பேறு இல்லையென்ற ஒரே குறைதான். கணவனும் மனைவியுங் கார்த்திகைதோறும் திருத்தணிகைமலைக்குப் போய் வருவார்கள். சஷ்டி விரதம் அனுஷ்டித்து வந்தார்கள்.

ஒரு சமயம் கனகாங்கி தன் தாய் வீட்டிற்குப் போயிருந்தாள். தாய்வீடு வில்லிவாக்கத்தில் இருந்தது. அதனுல் அடிக்கடி தாய்வீடு போய்வர அனுகூலமாயிற்று. நான்கைந்து நாட்கள் தாய் வீட்டில் தங்கியிருந்தாள்.

அன்றுமாலை மணி ஆறு இருக்கும். சிந்தாதிரிப்பேட்டையில் உள்ள தன் வீட்டிற்கு வந்தாள். அப்போது மணி ஏழு; தன் வீட்டிற்கு முன் ஒரு கார் நின்றது. காரைக் கண்டு தன் வீட்டிற்கு யாரோ பெரிய மனிதர்கள் வந்திருக்கின்றூர்கள் என்று எண்ணினுள். மெல்ல ஜன்னலில் எட்டிப்பார்த்தாள்.

அப்படியே திகைத்துவிட்டாள். உள்ளே நடந்த திடுக்கிடக் கூடிய நிகழ்ச்சியைக் கண்டு எல்லையில்லாத வேதனையடைந்தாள். உடல் வேர்த்தது. கண்களை நம்பாது திரும்பத் திரும்பப் பார்த்தாள். ஒரு அழகிய பெண்ணின் கையைப் பிடித்துக் குலுக்கி அவளுடன் ஊஞ்சலில் இருந்து கணவன் சரசசல்லாபமாகப் பேசிக்கொண்டிருப்பதைப் பார்க்கப் பார்க்க மனம் பதைத்தது. துக்கம் ஒரு புறம்; சினம் ஒரு புறம்; ஏமாற்றம் ஒரு புறம். அவளுக்கு ஒன்றுமே புரியவில்லை. கன்னுன் உலைக்களத் துருத்தியில் வரும் காற்றைப் போல் சூடான பெருமூச்சு விட்டாள்.

பளிச்சென்று புறப்பட்டு திரும்பவும் தாய் வீடு சென்ருள். ஒருத்தருடனும் பேசவில்லை. உடம்பு சரியில்லை யென்று ஒரு அறையில் போய் வெறுந்தரையில் படுத்தாள். கண்களை மூடினுள். ஒரு கணத்திற்குள் ஆயிரம் எண்ணங்கள் தோன்றின.

“ஆ! என்ன அநியாயம்? என்ன விபரீதம்? முருகபக்தியுடைய இவரே இப்படித் தவறி நடப்பாராயின் இனி யாரைத் தான் நம்புவது. கவலை யென்பதையே அறியாத எனக்கு இத்தனை பெரிய கவலை வந்து விட்டதே! என் மீது அவர் வைத்திருந்த அன்பெல்லாம் பொய்மை தானு? மாயவித்தையா? சீசீ! ஆண்களையே நம்பக்கூடாது. கபடநாடகம் புரியும் கன்னெஞ்சுபடைத்தவர்கள். மனைவியை வஞ்சிக்கும் மதிகேடர்கள். அந்தோ! நெஞ்சு வெடித்துவிடும் போல் இருக்கின்றதே. அவள் யாராக இருக்கலாம். புதியவளாகத் தெரியவில்லையே? பலநாள் பழகிய பாசாங்குக்காரியாகத் தெரிகின்றது. நான் இல்லாத போது காரில் வந்து போவது வழக்கம் போலும். ஆஆ! அக்கிரமம். வீடேறிவந்து நல்ல குடும்பத்தைக் கெடுக்கும் நாசகாரி...ம்...ம் அவளை ஏன் வையவேணும். இவர் இடங்கொடுத்துத்தானே அவள் வந்தாள். உப்பள்ளி சத்தியஞ் செய்து அக்கினிக்கு முன்னே தேவர் மூவர் அறியத் திருமணஞ் செய்துகொண்ட கணவன், நம்பிய நாயகியை விட்டு கண்டவளை விரும்புவாராளுல் இதனைவிட மோசம் என்ன இருக்கின்றது? இனி நாம் வாழ்ந்து என்னபயன்? வாழ்வு மாளிகை பூகம்பத்தில் அழுந்திவிட்டது. உயிர் பிரியாது நிற்கின்றதே. என்செய்வேன். ஈசனே! வள்ளிநாயகி நேசனே? தணிகை வாசனே! சிவோபதேசனே! சிவப்பிரகாசனே! சிதாகாசனே! என்னுல் இத் துன்பத்தைத் தாங்கமுடியவில்லையே! பெண்

ணைப் பிறப்பது பெருந்தொல்லையே. தந்தை யில்லாதவரைத் தந்தையாகவுடைய தணிகை நாயகனே! முருகம்மையாருக்குக் கரமளித்து வரமளித்த முதல்வனே!

என்றெல்லாம் தனக்குள்ளேயே பேசிக்கொண்டாள். பொழுது விடிந்தது.

இப்போது கனகாங்கி முகத்தில் பொலிவு இல்லை. பேய் பிடித்தவளைப்போல் இருந்தாள். தாய்தந்தையர், "அம்மா! உடம்புக்கு என்ன? ஏன் இப்படி யிருக்கின்றனை? உன் முகமே மாறுபட்டிருக்கின்றதே" என்று வினவினர்கள். அதற்கு அவள் சரியாகப் பதில் கூறவில்லை. அன்றைய பகல் அப்படியும் இப்படியுமாகக் கழிந்தது.

மாலை மணி ஐந்தரை. கமலநாதன் வந்தான். கணவனைக் கண்டதும் கனகாங்கிக்கு அடங்காத ஆத்திரம் உண்டாயிற்று. ஆனால் வெளிக்குக் காட்டிக்கொள்ளவில்லை. அவள் பார்வையில் குளிர்ச்சியில்லை. வழக்கமாக முகத்தில் இருந்த புன்னகையில்லை. கமலநாதன் காப்பி பலகாரம் சாப்பிட்டுவிட்டு மனைவியை அழைத்துக்கொண்டு புறப்பட்டான்.

ஆனால் கனகாங்கி வெறும் உடம்பாகத்தான் போனாள். உள்ளம்-உணர்ச்சி-உவகை யாதொன்றுமில்லை. வற்றல் மரம் போலாயினாள். கமலநாதன், "கண்ணே! என்ன ஒருமாதிரி யிருக்கின்றாய்? உடம்புக்கு யாது? ஒரு நாளும் இப்படியிருந்ததில்லையே? அம்மா வீட்டில் யாராவது உன்னை அவமதித்தார்களா? உனக்கு ஏதாவது விருப்பமானது கிடைக்கவில்லையா? நேற்றிருந்தவர் இன்றில்லை. ஆண்டவன் தந்த ஆயுளோ கொஞ்சம்: உள்ள நாள்வரை கள்ளமும் கவலையுமின்றி இருக்கவேண்டாமா? என்ன சங்கதி" என்று அன்பு கனிய வினவினான்.

கனகாங்கிக்கு அவன் சொற்கள் நஞ்சில் தோய்த்து ஏவிய நெருப்புக்கணைகள் போல் செவியையும் சிந்தையையுந் தீய்த்தன. அத்தனையும் நயவஞ்சகமென்றே கருதினாள். "ஒன்றுமில்லை, உடம்பு என்னமோ போல் இருக்கின்றது. இன்றிருக்கின்றவர் நாளை யிருக்கமாட்டார்" என்று கூறினாள். அவள் சொல்லில் உள்ள உட்பொருளை அவன் அறிந்தானில்லை.

வீடுபோய்ச் சேர்ந்தார்கள். கமலநாதன், "கண்ணே! உனக்கு உடல் நலம் இல்லை. அதனால் அடுப்பு மூட்டி அல்லல்

பட வேண்டாம். நான் போய் உணவுசாலையிலிருந்து உணவு கொண்டுவந்து விடுகின்றேன்" என்று கூறி, பாத்திரங் கொண்டுபோய் பத்து நிமிஷத்தில் உணவு கொணர்ந்தான்.

கணவனுக்கு உணவுபடைத்தாள் கனகாங்கி. அவள் கையும் மெய்யும் நடுங்கின. கமலநாதன், "கண்ணே! டாக்டரைக் கூப்பிட்டு வரட்டுமா? உனக்கு என்னமோ உடல் நலங் குன்றியிருக்கின்றது. ஒருநாளும் இப்படியிருந்ததில்லையே. உன்னைக் காண என்மனம் பதறுகின்றது" என்று அவள் மார்பில் கையை வைத்துப் பார்த்தான். மார்பு படபடவென்று துடித்தது. உடம்பு அனல்போல் இருந்தது.

கனகாங்கி, "ஒன்றும் வேண்டாம். நாளைக்கு நன்ருகி விடும். கவலைப்படவேண்டாம்" என்று கூறி சாப்பிடாமல் ஒருபுறம் போய் முடங்கிக்கொண்டாள். கமலநாதனும் கட்டிலில் கவலையுடன் படுத்துக் கண்ணுறங்கினுன்.

நடு இரவு; எங்கும் நிசப்தம் குடிகொண்டிருந்தது. மங்கலாக விளக்கு எரிந்துகொண்டிருந்தது. கூடத்தில் மாட்டியிருந்த நாள் குறிப்புத்தாள் காற்றில் அசைந்துகொண்டிருந்தது. மெல்ல எழுந்தாள் கனகாங்கி; வாழ்வில் வெறுப்புற்ற அவள் தன் பூஜை அறையில் முருகவேளை மும்முறை மண்மிசை வீழ்ந்து வணங்கினுள். "உன் திருவடிக்கு வருகின்றேன். என் மீது உன் கருணை என்றும் இருக்கவேண்டும். கருணுகரா! அருட்கடலே! என் கணவன் அவளுடன் இன்பமுடன் வாழட்டும்" என்று கூறிவிட்டு, மேஜைமேல் தன் நகைகளைக் கழற்றிவைத்தாள். அங்கே தன் கணவன் எழுதிவைத்திருந்த கடிதத்தைக் கண்டாள்.

அன்புள்ள என் கண்ணே! உன் பிரிவு எனக்கு மிகுந்த வருத்தத்தைத் தருகின்றது. அதிகம் எழுத முடியவில்லை. இக்கடிதத்தைக் கொணரும் ஸ்ரீநிவாசனுடன் உடனே புறப்பட்டுவா. மற்றது நேரில்.

இப்படிக்கு
உன் அன்புள்ள
கமலநாதன்

கனகாங்கியின் கண்களில் தாரைதாரையாக நீர்வடிந்தது. கணவன் தன் ஆசைநாயகிக்கு எழுதிய கடிதம் என்று எண்ணினுள். அவள் கொண்ட எண்ணம் அக்கடிதத்தினுல் உறுதியாயிற்று. தோட்டத்திற்குச் சென்ருள். கிணற்றில் வீழ்ந்துவிட்டாள்.

இந்த சத்தங்கேட்டு கமலநாதன் திடுக்கிட்டு விழித்தான். விளக்கைத் தூண்டினான். மனைவியைக் காணாது திகைத்தான். ஒருகணத்தில் மின்னல் போல் மனம் படபடத்தது. தோட்டத்துக்கு ஓடினான். கிணற்றில் குமிழி வரும் ஒலியைக் கேட்டான். உடனே கிணற்றில் குதித்தான். மனைவியை எடுத்து தோள்மீது சாத்திக்கொண்டு, வெகு பாடுபட்டு மேலே வந்தான். கனகாங்கியைக் கட்டிலில் படுக்கவைத்தான். வேண்டிய உபசாரஞ் செய்தான்.

அவள் கண்விழித்துப் பார்த்தாள். தான் மாளவில்லையென்பதையறிந்தாள். கண்ணீர் தாடைவழியே வழிந்து மார்பில் வீழ்ந்து நனைந்த சீலையை மேலும் நனைத்தது. பேச முடியாமல் தொண்டை அடைத்தது.

கமலநாதன், "கண்ணே! ஏன் கிணற்றில் வீழ்ந்தாய்? உனக்கு என்ன கவலை? யார்மீது வெறுப்பு? தற்கொலை செய்துகொண்டவர்கட்கு ஒரு யுகம் வரை மனிதப் பிறப்பு வராது. நீ எந்த விஷயமும் என்னுடன் கலந்து யோசிக்காமல் செய்யமாட்டாயே. இப்படியும் அறிவைப் பறிகொடுக்கலாமா? அநியாயமாக என் வாழ்நாளை முடிக்க எண்ணினையே உன்னைப்பிரிந்து நான் உலகில் வாழ்வேனோ?"

சும்மா மாயவார்த்தைகளைப் பேசாதீர்கள். நீங்கள் என்னைக் கலவாமல் எத்தனையோ காரியங்களைச் செய்கின்றீர். உங்கள் நாடகம் போதும்; போதும். எல்லாம் உங்கள் நன்மையைக் கருதித்தான் நான் சாகத் துணிந்தேன். நீங்கள் மிகவும் நல்லவரைப்போல் நடிக்கின்றீர். பசுத்தோல் போர்த்துக் கொண்டு உலாவுகின்ற புலியாக இருக்கின்றீர். இந்தக் கலியுகத்தில் யாரை நம்புவது? நம்பிக்கைக்கு இடமே இல்லை.........

பெண்மணி! உன் சொற்கள் என்ன புதுமையாக இருக்கின்றது. யாரைக் குறித்துப் பேசுகின்றாய்? உனக்கு என்ன புத்தி சுவாதீனமில்லையா? ஜன்னிக்கோளாறு? எனக்கு ஒன்றுமே விளங்கவில்லையே. என்னுடைய நலனைக் கருதி மாள நினைந்தாயா? ஆ! என்ன விபரீத புத்தி! நீ மாண்டபின் நான் உலகில் வாழ்வேனா? நீ என் வெளியே உலாவும் உயிரல்லவா?

"போதும், போதும். நிறுத்துங்கள். இத்தனை நாளாக நான் உங்களை அப்படித்தான் நம்பினேன். ஏன் இந்த பசப்பு வார்த்தை? நேற்று மாலை இங்கு வந்து உங்களோடு கொஞ்சிக்

குலாவிக்கொண்டிருந்த பெண் யார்?......(என்று சொல்லும் போது துன்பம் மேலிட்டு வாய்விட்டு அழுதாள்)

அப்போது இரவு மணி மூன்று. யாரோ கதவு தட்டினார்கள். ஓடிப்போய் கமலநாதன் கதவுதிறந்தான். நேற்று வந்த பெண்ணுருவம் காரைவிட்டிறங்கி உள்ளே வந்தது; கண்டாள் கனகாங்கி.

அவளுக்குத் துக்கம் மறைந்து சீற்றம் பொங்கி எழுந்தது. துள்ளியெழுந்தாள். கமலநாதன் சிரித்தான். மனைவியின் அறியாமையைக் கருதித்தான் நகைத்தான்.

"என்ன சிரிக்கின்றீர். இதுதான் இல்லறமா? இதுதான் ஆடவர்க்கு அழகா? இத்தனைநாட்களாக நீங்கள் செய்த பூஜையின் பயனு இது? சிறிது நேரத்திற்கு முன் வெளியே உலாவும் உயிர் என்று என்னைக் கூறினீரே! இந்த மாயக்கள்ளி–குடிகெடுக்க வந்த கொடிக்கள்ளி–திருட்டுத்தனமாக வந்த திருகுகள்ளி–சதிசெய்ய வந்த சதுரக்கள்ளி யார்? உண்மையைச் சொல்லும்" என்று கர்ஜித்தாள் கனகாங்கி.

"அம்மா! ஐயாவைக் கோபிக்காதீர். உண்மையையுணர்ந்து தெளிவு பெறுங்கள். அம்மா! நான் இவர் சிநேகிதன்" என்றது அந்தப் பெண்ணுருவம்.

"அடீ பாதகி! பேசாதே! என் வீட்டை விட்டு நட. நான் மாண்டபிறகு நீ இவரோடு கொஞ்சு; குலாவு; ஆ! என்ன அநியாயம். வீடேறிவந்து விபசாரமா? பாதகி! தோதகஞ் செய்யவந்த காதகி! என் வாழ்வென்னும் பூமரத்தை வெட்டிய கோடாலியே! நள்ளிருளில் வந்த நாசகாரியே! சமாதானமா செய்யவந்தாய்" என்று வாய்க்கு வந்தவாறு வசைமாரி பொழிந்தாள்.

குலுங்கக் குலுங்கச் சிரித்தான் கமலநாதன். நேற்று வந்த பெண்ணும் இவள்தானே. இதற்கா இத்தனை பிரமாத கோபம். அட பயித்தியமே. சுத்த மக்குவாக இருக்கின்றாயே. இவர் எனது நண்பர் ஜி. தரன். இவர் முழுப்பெயர் கங்காதரன். இவர் சினிமா நடிகர். பெண் வடிவில் நடிக்கின்றவர். நேற்றும் இன்றும் இவருடைய நடிப்பைப் படமெடுக்கின்றார்கள். நேற்று படம் பிடிக்கப் போகும்போது இங்கு வந்துவிட்டுப் போனார். இன்று படம் பிடித்துவிட்டுத் திரும்பிப் போகும்போது வரச்சொல்லியிருந்தேன். அட அசடே! நேற்று

இவர் வந்திருக்கும்போது நீ வந்து பார்த்துவிட்டுத் திரும்பிய தாக உன் சொற்களிலிருந்து இப்போது அறிகின்றேன். நேற்றே கேட்டிருந்தால் விஷயம் விளங்கியிருக்கும். "பேதைமை யென்பது மாதர்க்கு அணிகலம்" என்பதில் உண்மையிருக் கின்றது. "நண்பரே! உமது பெண் வடிவத்தை மாற்றிவிடும்" என்ருன்.

உடனே கெங்காதரன் தலையில் வைத்திருந்த மயிர்க் கற்றையை யெடுத்தான். சீலையை அவிழ்த்து எறிந்தான். நிஜாரும் அரைக்கைச் சட்டையும் அணிந்த ஆண் வடிவுடன் நினருன்.

கண்டாள் கனகாங்கி. அடங்காத வெட்கங் கொண்டாள். "கண்ணுல் கண்டதும் பொய், காதால் கேட்டதும் பொய், ஆய்ந்து ஓய்ந்து பாரககவேணும்" என்ற பழமொழியை நினைந் தாள். பேசமுடியாமல் திகைத்தாள்.

கமலநாதன் "நண்பா? நீ வந்து ஒருகலக்கு கலக்கிவிட்டாய். இவள் உன்னைப் பெண் என்று எண்ணி கிணற்றிலேகூட விழுந்துவிட்டாள். தெய்வாதீனமாக உயிர் தப்பினுள். நடிகர் களோடு பழகுவதிலும் ஆபத்து இருக்கின்றது; இப்படியிரு. "கண்மணி! உன சந்தேகம் தீர்ந்துவிட்டதா? ஸ்டவ்வைப் பற்றவைத்து டீ போடு" என்ருன்.

கனகாங்கி நாணத்துடன் சென்று வேறு சீலையை உடுத்துக் கொண்டு டீ போட்டுக் கொணர்ந்தாள். வெள்ளித் தட்டில் பிஸ்கட்டு கொணர்ந்து வைத்தாள். இரு நண்பர்களும் பிஸ் கட்டைச் சாப்பிட்டு டீ அருந்தினுர்கள். "கண்ணே! நீயும் சாப்பிடு" என்று அருமை மனைவிக்குத் தந்தான் கமலநாதன். கனகாங்கி சுடச்சுட குடித்துவிட்டு சற்று ஆறுதல் அடைந் தாள். மூவரும் சிறிது நேரம் ஏதேதோ பேசிக்கொண்டிருந் தார்கள். பின்னர் நடிகர் ஜி. தரன் எழுந்து, "நண்பா! நான் வருகின்றேன். அம்மா! வணக்கம். நான் உத்தரவு வாங்கிக் கொள்ளுகின்றேன். ஐயாவைப்பற்றி ஒன்றும் தப்பாக எண்ண வேண்டாம்" என்று கூறிவிட்டு கார் ஏறிப் போனுர்.

கனகாங்கி மேஜைமேல் இருந்த கடிதத்தை எடுத்து, "இது என்ன கடிதம்" என்று கணவனுக்குக் காட்டினுள். "கண்மணி! எனக்கு வில்லிவாக்கம் வந்து உன்னை அழைத்துவர நேரம் இருக்காது என்று முதலில் எண்ணினேன். அதனுல் நமது

உ

முருகா

# திருப்புகழும் வள்ளியும்

தணிகைமணி, வ. சு. செங்கல்வராய பிள்ளை, எம். ஏ. அவர்கள்.

(கசச-ம் பக்கத் தொடர்ச்சி)

(11) வள்ளியைத் தோளின் மேல் வைத்து ஒளித்தோடினது:

'குறமானைத் தோளில் உறவாகக் கொண்ட வாழ்வே' 524

'வேடுவர் மாதாம் ஓர்மினை எடுத்தே தான்வர' 714

'உரத்தோ ளிடத்திற் குறத்தேனை வைத்திட்
டொளித்தோடும் வெற்றிக் குமரேசா' 534

இம்மட்டோ! இன்னும் கூறுகின்றார் அருணகிரியார்:

(1) முருகா! நீ தேவர்தம் பெருமாள்; ஆதி நாதராம் சிவனும் (உனது தண்டைக் கழலைப் பேணித்) தொழுது நிற்கின்ற தேசிக மூர்த்தி நீ; அங்ஙனமிருந்தும், நீ வள்ளியின் பாதத்தை உன் தலைக்கு அணியாகக் கொண்டுள்ளாய்—என்கின்றார்.

"புனமேவும்**வஞ்சி**பாதம் படுஞ் சேகரா!
தண்டையங் கழல்பேணி** ஆதிநாதன் தொழும்
தேசிகா! உம்பர்தம் பெருமாளே! [1107]

---

வேலைக்காரனை அனுப்பி உன்னை அழைக்கக் கருதினேன். பிறகு வேலை முடித்துவிட்டு நேரத்துடன் ஆபீசைவிட்டு வீட்டிற்கு வந்தேன். எழுதிய கடிதத்தை மேஜைமீது வைத்துவிட்டு நானே வந்தேன். உன் சந்தேகத்திற்கு இக்கடிதம் ஒரு சாட்சியாக முடிந்துவிட்டதா? உலகமே இப்படித்தான் இருக்கின்றது. மெய் பொய்யாகத் தோன்றுகின்றது. பொய் மெய்யாகத் தோன்றுகின்றது. நிதானத்துடன் பலமுறை சிந்தித்து தெளிந்துதான் ஒரு பொருளை நிச்சயிக்கவேண்டும்" என்றான்.

கணவன் கால்மேல் வீழ்ந்து தன்னை மன்னிக்குமாறு வேண்டினாள் கனகாங்கி. மனைவியையெடுத்து மார்போடு தழுவி, "மாணிக்கமே! மன்னிக்கக்கூடிய குற்றம் நீ ஒன்றுஞ் செய்ய வில்லையே; வருந்தாதே. போய் வெந்நீர் தயார் செய். நேரமாகின்றது. குளித்துவிட்டுப் பூஜை செய்யலாம்" என்றான் கமலநாதன். இருவரும் நீராடி நெடிய வடிவேற் பெருமானை வந்தித்தார்கள்.

(2) முருகா! வானவர் பெருமாளாய்த் தேவர்களுக்கெல்லாம் தஞ்சம் அளிக்கின்றவன் நீ; அங்ஙனமிருந்தும் நீ வள்ளி பால் மால்கொண்டவனாய் அவளிடம் சென்று 'எனக்கு உன்னை ஒழிய வேறு தஞ்சம் இல்லை' என்று கூறி அவளிடம் காத்து நின்றனையே—என்கின்றார்.

'தினைப்புன மீதே மாதொடு மிகமாலாய்—
மேகமென் குழலாய்! நீகேள் இனி

'வேறு தஞ்சமும் நீயே யாமென
வேளை கொண்ட பிரானே வானவர் பெருமாளே' [1000]

பின்னும், நான் வழியடிமை என்று வள்ளிக்கு அடிமைச் சீட்டு முருகவேள் எழுதிக்கொடுத்த ஒரு ரகசியத்தையும் அருணகிரியார் வெளிப்படுத்துகின்றார். இந்த ரகசியம் அவருக்கு வள்ளிமலையில் வெளிப்பட்டது. இதைத்தான் "குன்னம் குறிச்சி வெளியாக்கி விட்டது"-என்றார் கந்தர் அலங்காரத்தில் (24). பத்திரம் எழுதிக்கொடுத்தால், எழுதிவாங்குபவரிடம் மூலப்பிரதியும், யாவருங் காணக்கூடிய பொது இடத்தில் (Public Registry Office-ல்) உண்மை நகலும் இந்நாளில் இருப்பது போல— முருகவேளும் தான் வள்ளிக்கு வழியடிமை என்றெழுதிய சாசனத்தை (Service agreement) வள்ளியின் காதோலையில் மூலத்தை எழுதியும், அதன் உண்மைநகலை 'வேதம் அறிய, தேவர்கள் அறிய, உலகமெல்லாம் அறிய மேருமலையில் எழுதியும் வைத்தனராம், இதை-

"குறமாதின்* குழையோலை சாதனம் என்றுரையா" [1002]

"வேடுவர் சிறுமி ஒருத்திக்கு, யான் வழியடிமை யெனச்செப்பி**
வேதமும் அமரரும் மெய்ச்சக்ர வாளமும் அறிய
விலைப்பட்டு மேருவில் மிகவும் எழுத்திட்ட பெருமாளே. [1199]

என விளக்கியுள்ளார்.

இங்ஙனம் எல்லாம் வள்ளியின் பெருமையைக் கண்ட காரணத்தால்— "முருகா நீ 'குறத்தி கிங்கரன்' நீ 'வள்ளி திருவேளைக்காரன்' 'நீ 'வேடிச்சி காவலன்' என்றெல்லாம் வள்ளியோடு மருவிய உன் திருநாமங்களையே நான் ஓதி உன் சீர்பாத வகுப்பாதி பாட வேண்டும்' என அருணகிரிநாதர் வேண்டினர்.

"குறத்தி கிங்கரன் எனப் படைத்த பெயர் பேசா—
நின் பதயுகப் ப்ரசித்தி யென்பன வகுத்துரைக்க
நின்பணி தமிழ்த்ரயத்தை யருள்வாயே— [1233]-என்றனர்.

வேண்டுவார் வேண்டுவதே இறைவன் ஈவான்; எனவே இவ் வேண்டுகோளின் விளைவாக "திருவகுப்பு" என்னும் திப்பிய நூல், எழுந்தது. ஆதலால் அருணகிரியார் அருளிய திருவகுப்புக்களில் எல்லாம் (பதினெட்டிலும்) (9-10 தவிர) வள்ளியின் பெருமையோ, பெயரோ காணலாகும். மேலே குறித்தவாறு வள்ளியுடன் பல திருவிளையாடல்களைச் செய்த பெருமான் ஈற்றில் வள்ளிக்கு ஸ்பரிச தீக்ஷையும் பிரணவ உபதேசமும் செய்து தமது தேவியாக்கிக் கொண்டார். செட்டியாக வந்து வளையல் இட்டதால் ஸ்பரிச தீக்ஷையும், விநாயகர் யானையாய் எதிரில் வந்ததால் பிரணவக் காட்சியும் பெற்றுப் பின் முருகவேளை அணைந்த போது முருகவேளால் பிரணவ உபதேசமும் வள்ளியம்மை பெற்றதாக அருணகிரியார் தெரிவிக்கின்றனர்.

இதை—

"ஓது குறமான் வனத்தில் மேவியவள் கால் பிடித்துள்
ஓமெனுபதேச வித்தொ டணைவோனே." [790]

எனவரும் இடத்துக் காணலாம். 'ஓம்' என் (என்கின்ற) உபதேச வித்து – இதுதான் சிவபிரானுக்கும் உபதேசிக்கப் பட்டதாம்.

"சிவனார் தமக் குரிய உபதேச வித்தை யருள்
திருவேரகத்தில் வரு பெருமாளே" [224]

என்பது கவனிக்கற்பாலது. உபதேச வித்தே ஞானவித்து.

'சுவாமி வெற்பில் ஞானவித்தை, அருள் செய் தாதை கற்க
வினவ ஓது வித்த பெருமாளே' [226]—

எனவருவதைக் காண்க.

இத்துணைப் பெருமை வாய்ந்த வள்ளிபால் ஸ்பரிச தீக்ஷை பெற்று, வினை மாளப் பெற்றார் அருணகிரியார் என்றால், அருணகிரியாரின் பெரும் பேற்றை என்னென்று கூறுவது.

'எனதாயி வளிநாயகி' [644]

'கடையேன் இருவினை நோய் மலம் மாண்டிட
தீண்டிய ஓண் சுகமோகினி வளி நாயகி' [568]

"இடர் கலிகள் பிணியோட எனையுமருள் குறமாது" [643]

இங்ஙனம் வள்ளிபால் தாம் பெற்ற பேற்றை நினைந்து மகிழ்ந்தே அருணகிரியார் தமது நூல்களில் வள்ளியின் பெருமையையே எடுத்தெடுத்துரைத்து மகிழ்கின்றார்.

உ

முருகா

# உயிருக்கு உறுதி பயத்தல்

K. S. சுந்தரமூர்த்தி, புவனகிரி.

உயிரானது பல யோனிகளில் பிறந்து பிறந்து, உழன்று உழன்று, கடைசியில் அறிவற்ற நடையும், மாறுபடுகின்ற பொய்யும், கொடிய பிணிக்கூட்டமும், துன்பத்தொகுதியும் இத்தன்மையவாகிய பலபொருள்களைச் சுமத்தி, வினையென்று சொல்லப்படுகின்ற பழைய மாலுமி செலுத்த, அந்த நிலையாகவே, கர்ப்பம் என்கின்ற பெரிய நகரின்கண் வந்து, இம்மனிதவுடலிலே, தாயின் உதரத்திலே ஆபாசமான மல மூத்ர இருப்பிடங்களின் மத்தியிலிருந்து தனக்குத்தானாகவே, "ஐயோ! நான் எனது ஜன்மாந்தரங்களில் கொஞ்சமேனும் புண்ணியம் செய்யாமற்போனேன். பிரபஞ்சானுபவம் தெரிந்திருந்தும்

---

ஆதலால் திருப்புகழ் 'முருகன் புகழ் நூல் மட்டும் அல்ல; வள்ளியின் திருப்புகழ் நூலுமாம்' என்று திடம்பட உரைக்கலாம்.

வள்ளியை மணம்புணரு முன் முருகன் மறக்கருணை காட்டினன்; வள்ளியை மணந்த பின் முருகன் கருணை அறக்கருணையாய் மாறிற்று என்னும் கருத்தமைந்த பாடலைச் செப்பி இக் கட்டுரையை முடிப்போம்.

கருணைநிறை கடவுள்நீ என்றாலும் உன்கருணை
ஓஹோ! மறக்கருணையே
கார்நிறச் சூரர்களை வேல்கொண்டு மாய்த்தனை
கமலமலர் மேலயனையே
பொருணிறைவு காண்கிலை என்றே புடைத்துப்
புலம்பிடச் சிறையிலிட்டாய்
புனக்கரும் பாகுமெம் வள்ளியை மணந்தபின்
பூண்டனை அறக்கருணையை
இருணிறையும் உள்ளம்உள கீரர்பொய் யாமொழிக்
கின்பந் தனை யூட்டினை
எழிலிவடி வினன்எகினன் இந்திரன் சேடன்முதல்
யாவர்க்கும் நற்றணிகையில்
அருணிறைவு காட்டினை அருணகிரி நாதரை
ஆட்கொண்டு பாவகுக்கும்
அந்தஅருள் தந்தனை செந்தமிழ்த் தெய்வமே
ஆயிகுற மான்மகிணனே!


என்னை யார் என்ன செய்வார்கள் என்ற கர்வத்திஞல் உண்மையான நற்கருமங்களைச் செய்யாமல், இதரர்களை மோசம் செய்வதற்காகவே வீணை கர்மங்களைச் செய்து கொண்டும், நற்கருமங்களைச் சொல்வாரின் வார்த்தையை செவியிற் கேளாமலும், ஒருக்கால் கேட்டாலும் மனதில் நிறுத்தாமலும்; நான் என் இஷ்டம்போல் செய்வேனென்று சொல்லி அவர்களை நிந்தித்து நற்கதியை விரும்பாமற் போனேன்'' என்று இப்படியாக பலவாறு நினைந்து, மிகவும் துக்கித்து, "இனி இந்த மல, மூத்திரப்பைகளால் நெருக்குண்டிருக்கும் கருப்பையிலிருந்து பூமியில் பிறந்தவுடன் ஞானம் அடைவதற்கு வேண்டிய முறையைப் பின்பற்றி பரமாத்மாவை தரிசிப்பேன்''என்று சிசுவானது இவ்வாறு நினைத்து துக்கித்துக் கொண்டிருக்கும் சமயத்தில், பத்து திங்களும் கடந்து, பிண்டம் தாய்க்கு நோயை உண்டாக்கித் தனஞ்சயனென்னும் வாயு சிசுவை வெளியில் தள்ளும்போது, அந்த சிசுவானது பூர்வ ஞானத்துடன் கர்ப்பத்தில் இருப்பதால் வெளிவரப் பயந்து இரண்டு கைகளையும் சேர்த்துச் சிரசின்மேல் வைத்து, ஐயோ! மாயா சம்சாரத்தில் கொண்டுபோய்த் தள்ளுகின்ருயா வென்று இறைவனைக் கும்பிட்டுக்கொண்டே, தாயின் கருப்பையிலிருந்து புறப்பட்டுப் பூமியில் பிறந்தவுடன், வெளிக்காற்று பட்டு பூர்வ ஞானம் கெட்டுத் தன்னை மறந்திருக்கும் சமயத்தில், குளிர்ந்த தண்ணீரைச் சிசுவின்மீது தெளிக்க, குழந்தை குவா! குவா! என்று வீரிடுகிறது. (அதாவது) இறைவா! எங்கே! எங்கே! எனக்குப் பூர்வ ஞானம் இருந்ததே! அந்த ஞானம் எங்கே போயிற்றென்று சிசுவானது இறைவனை நினைந்து துக்கித்து அழுகிறது.


பிறகு நாளுக்கு நாள் அக் குழந்தை வளர்கிறது. முதலில் தாயானவள் அக் குழந்தைக்குப் பாலூட்டி, சீராட்டி, தாலாட்டி, அருமையுடன் வளர்க்கிருள். வயது ஐந்து ஆகிறது. பிறகு பள்ளியில் படிக்கிறது அக் குழந்தை. தனது புன்முறுவலிஞல் தாய், தந்தையரை மகிழச் செய்து, அவர்களுடைய அன்புக்குப் பாத்திரமாகி வளர்ந்து இளமைப் பருவத்தை அடைந்து அழகுடன் மன்மதனைப்போன்று செல்வத்தைச் சேர்க்க வாணிப வழியில் ஈடுபடுகின்ருன். இந் நிலையில் ஆசைப்பேய் அவனை ஆட்டி வதைக்கிறது. அவனிடத்தில் காமாதிகளான பத்து குணங்களும் அடைக்கலமடைகின்றன. ஒன்ருவது அவனிடத்தில் இல்லாமல் போகவில்லை. 1. அதாவது பிறர் பொருளின்மீது ஆசைவைப்பது. முதலில் செல்வத்தின்

மீது ஆசை உண்டாகிறது. அதனாலன்றோ தம் தேசத்தை விட்டு, தன்னகத்தே இருக்கும் பொருள் போதாதென்றும், இன்னும் சேர்க்கக் கருதியும், அயல்நாடு சென்று சம்பாதிக்க நினைக்கிறது. இப்படிச் செல்வத்தைப் பெற்றால் மட்டும் போதுமா? அதை வைத்து மகிழ்ந்தால் மட்டும் போதுமா? தன்னுடன் சேர்ந்து மகிழ இன்னொருவரை தேடச்சொல்கிறது ஆசை. அந்த ஆசையின் முடிவே திருமணம். வீட்டிற்கு வருகிறாள் மனைவி. இருவரும் அதிகப் பிரீதியுடன் வாழ்கிறார்கள். இவர்களின் ஆசையின் காரணமாக அவள் கருவடைந்து குழந்தை பெறுகிறாள். இப்பொழுது அவனது வாழ்விலே துக்கமாகிய அலைகளின் பெருக்கினால் நிலை பெயருமிடங்கள் தோறும் விடாய்த்து குடும்பமென்கின்ற சமுத்திரத்தில் மூழ்கித் தவிக்கின்றான். மேலும், மேலும் பாவத்தைச் செய்ய முற்படுகிறான். 2. ஒருவருக்குக் கெடுதி விளைவிக்க முயற்சி செய்ய ஆசை கொண்டும், 3. தனது சொத்திலிருந்து தனக்கு வேண்டியவர்களுக்குகூட சிறிதேனும் கொடுக்கக் கூடாது என்ற எண்ணத்தைக் கொண்டும், 4. மனைவி, மக்களிடம் அதிக ஆசை வைத்து தனக்கு உண்டாயிருக்கும் பொருள் போதாதென்றும் இன்னும் சம்பாதிக்க வேண்டுமென்றும் ஆசையை விருத்தி செய்தும், 5. அதனால் வந்த செல்வத் திமிரினால் இதரர்களை லக்ஷியம் வைக்காமல் பேசியும், 6. தன்னைப் போல் பிறரும் சுகம் பெறுதலைச் சகியாமையை விளைவிக்கும் சித்த விருத்தியை உண்டாக்கிக் கொண்டும், 7. பலர் மெச்ச வேண்டுமென்பதற்காக தருமம், யாகம் முதலானவைகளைச் செய்தும், 8. சகல சம்பத்துக்களிலும் தனக்கு நிகரானவர்கள் ஒருவருமில்லை என்று கர்வப்பட்டும், 9. தனக்கு நேர்ந்த துக்கம் பிறருக்கும் நேரிட வேண்டுமென்கிற எண்ணத்தைத் தோற்றுவித்தும், 10. கெடுதி செய்தவனுக்கு கெடுதி விளைவிக்க வேண்டுமென்று எண்ணுகின்ற இத்தகையான பத்துக் குணங்களும் ஒருங்கே அவனிடத்தில் அமையப் பெற்றுவரும் வேளையில்..............!

(தொடரும்)

Printed & Published by M. Madhusoodana Sivam at the Thiruppugal Amirtham Press, 144 Swaminaicken Street, Chindaripeta, Madras, Editor: Sri Kirupanandavari,




**THIS LITTLE BOOK IS A GREAT BOON TO STUDENTS**

(400 பக்கங்கள் கொண்டது)
விலை ரூ. 2—8—0
தபால் செலவு 0—8—0

**வியாபார சம்பந்தம் உள்ள எல்லோருக்கும் அதிக உபயோகமான புத்தகம்**

ஆங்கிலத்தில் விலை ரூ. 5—15—0
தமிழில் „ 5—15—0
தபால் செலவு 0—8—0

**வேண்டுவோர் நமது காரியாலயத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.**

---

ஆஸ்திக அன்பர்களுக்கு விருந்து



முருகன் புகழைக் கூறுவதும், இக்காலத்தில் இப்படி நடந்ததா என்று ஆச்சரியப்படத்தக்க அற்புத விஷயங்கள் பல அடங்கியதுமான 5 புத்தகங்களுக்கு தபால் செலவுடன் ரூ. 1-4-0 அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

**ஆ. சுப்பிரமணிய நாயகர், பெரம்பூர் பாரக்ஸ், சென்னை.**


---

## சென்னை தென்னிந்திய அர்ச்சகர்கள் சங்கம்

### கிளை — அவிநாசி

சென்ற விக்ருதி௵ வைகாசி௴ 25௳ சைவ சித்தாந்த சரபம் பழனி வேத சிவாகம பாடசாலை தலைமை ஆசிரியர் காசிவாசி (சென்னிமலை) சிவஸ்ரீ ஈசான சிவாச்சாரியரவர்கள் தலைமையில் ஷை கிளைச் சங்கம் ஸ்ரீ அவிநாசியப்பர் ஆலயத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. ஷை கிளைச் சங்க ஆதரவில் ஸ்ரீ பிருஹத்கருணாம்பிகா வேத சிவாகம பாடசாலையும் நிறுவப்பட்டிருக்கிறது. ஷை பாடசாலையை கௌரவ நிரந்தர ஆசிரியராக இருந்து நடத்திக்கொடுப்பதாக காசிவாசி சிவஸ்ரீ ஈசான சிவாசாரியரவர்கள் இசைந்தருளினார்கள். துணை ஆசிரியர்: கி. சி. சுந்தர குருக்கள்.

ஷை சங்க நிர்வாகிகள் விவரம்

**தலைவர்: கி. சு. சுப்ரமண்ய குருக்கள், அவிநாசி. துணைத்தலைவர்: மு. கணேச குருக்கள், செயலாளர்: சு. நடேச குருக்கள், பொருள் காப்பாளர்: பா. முத்துசாமி குருக்கள், கணக்கு பரிசோதகர்: நா. பு. குமாரசுப்ரமண்ய குருக்கள், பாடசாலை நிர்வாகி: சு. சிவராம குருக்கள்.**

**கரூர் விலை என்பதே நம்பிக்கை**

விசேஷகாலங்களுக்கும் கலியாணங்களுக்கும்

பனாரஸ், சேலம், பெங்களூர், கோயமுத்தூர், காஞ்சீபுரம், மதுரை

# பட்டு & நூல் ஜவுளி தினுசுகள்

ஏராளமாக வரவழைத்திருக்கிறோம். தவறாது விஜயம் செய்யுங்கள்

# ஜெ. மு. சாமி

**கீழமாசி வீதி, (பெரிய விளக்குத்தூண் சமீபம்) மதுரை.**

*Head Office:*
வடக்கு மாதுளம் கோல்லைத்தெரு, உறையூர், திருச்சி

*Branch:*
கடை வீதி, **நாகப்பட்டினம்**